ISSN - 2235-9796


20 பக்கங்கள் 30/-

# Valai வலை

சமகால பொது அறிவுத் தொகுப்பு

உண்மை
நேர்மை
நம்பிக்கையே
உயர்ச்சி தரும்

சிலந்தி - 05 | நவம்பர் - 2015 | இழை - 50




சோபித தேரர் (04)

**வாசக நெஞ்சங்களுக்கு...!**


பொன்விழாக் காணும் உங்கள் வலையின் இதழ் 50ஆவது இழையில் உங்களைச் சந்திப்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். எப்படி சௌக்கியமாக இருக்கிறீர்களா?

இந்த ஐம்பதாவது இழை வரை என்னால் ஓடிவர முடிந்ததென்றால் அது நீங்கள் வலைக்கு காட்டி வந்த ஆதரவும், எனக்கு நீங்கள் ஒவ்வொருவரும் தந்து வருகின்ற உற்சாகமுமே ஆகும்.




நீரிழிவு (03)

என்னால் எவ்வளவு தூரம் ஓடிவந்து உங்களுக்கு உதவ முடியுமோ அந்தளவு உதவுவேன் என்ற நம்பிக்கையுடன் உங்களுடன் நானும் பயணிக்கின்றேன்.




போட்டிப் பரீட்சைகளுக்கு பொது அறிவுடன் நுண்ணறிவும் அடங்கி உள்ளதால் அதனையும் சேர்த்து வெளியிட்டால் உங்களுக்கும் பயனுள்ளதாக அமையும் என்பதால் எனது வேலைப்பளுவின் மத்தியிலும் கூட, இந்த 50 ஆவது வலையின் இழையில் இருந்து நுண்ணறிவு வினா-விடையும் உங்கள் வலையில் இணைகிறது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.



எட்வேட் அடாமி (11)

கடந்த வருட வலையின் 37 ஆவது இழையில் நுண்ணறிவு வினா-விடையும் வெளிவந்தமையும் உங்களுக்கு ஞாபகம் இருக்கலாம்.

வலையின் வரவு தாமதமானாலும், அதன் தரம் குறையாது வெளிவர வேண்டும் என்பதே எனது விருப்பம். எனது நூலக சேவையுடன் இதனையும் ஒரு சேவையாகவே செய்து வருகின்றேன் என்பதை மீண்டும் உங்களுக்கு நினைவுபடுத்துகின்றேன். எனவே என்னைப் புரிந்து கொள்வீர்கள் என நம்பி எனது பயணத்தை தொடர்கிறேன்.

எனவே இந்த இதழ் தொடர்ந்து வெளிவருவது உங்கள் கைகளிலேயே தங்கியுள்ளது. எனவே உங்கள் ஆதரவில் எனது பணி தொடரும்... நன்றி.


- 'வலை' வீசல் தொடரும்...

சி.என்.எச்.சாள்ஸ்
தொகுப்பாசிரியர்

## இம்மாத சர்வதேச தினங்கள்...

- ✧ நவம்பர் - 03 - ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்களை முடிவுக்கு கொண்டு வரும் ஐ.நா. தினம்
- ✧ நவம்பர் - 05 - சர்வதேச தொடர்பு தினம்
- ✧ நவம்பர் - 08 - விமானப்படை தினம்
- ✧ நவம்பர் - 09 - உலக சுதந்திர தினம்
- ✧ நவம்பர் - 10 - உலக பொதுநலவாய தினம்
- ✧ நவம்பர் - 10 - உலக மலாலா தினம்
- ✧ நவம்பர் - 11 - உலக நகரத் திட்டமிடல் தினம்
- ✧ நவம்பர் - 11 - உலக போர் தினம்
- ✧ நவம்பர் - 11 - உலக நினைவூட்டல் தினம்
- ✧ நவம்பர் - 11 - தேசிய மீன்பிடி தினம்
- ✧ நவம்பர் - 13 - உலக அன்பு தினம்
- ✧ நவம்பர் - 14 - உலக குழந்தைகள் தினம்
- ✧ நவம்பர் - 14 - உலக நீரிழிவு தினம்

  **இவ்வருட தொனிப்பொருள் : "நீரிழிவைத் தவிர்க்கலாம் அதற்குச் சகலரும் ஒன்று சேர வேண்டும்"**
- ✧ நவம்பர் - 16 - உலக சகிப்புத்தன்மை தினம்
- ✧ நவம்பர் - 17 - உலக மாணவர் தினம்
- ✧ நவம்பர் - 18 - உலக மனநோயாளிகள் தினம்
- ✧ நவம்பர் - 18 - உலக கை கழுவும் தினம்
- ✧ நவம்பர் - 19 - உலக கழிவறைகள் / மலசல கூட தினம்
- ✧ நவம்பர் - 19 - உலக ஆண்கள் தினம்
- ✧ நவம்பர் - 19 - உலக குடியுரிமையாளர் தினம்
- ✧ நவம்பர் - 20 - உலக சிறுவர்கள் / குழந்தைகள் உரிமைகள் தினம்
- ✧ நவம்பர் - 21 - உலக ஹலோ தினம்
- ✧ நவம்பர் - 21 - உலக தொலைக்காட்சி தினம்
- ✧ நவம்பர் - 25 - உலக பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்பு தினம்
- ✧ நவம்பர் - 26 - உலக சட்ட தினம்
- ✧ நவம்பர் - 30 - உலக கணினி பாதுகாப்பு தினம்




## இலங்கை பற்றிய இம்மாத வலை வீசலில்...

❒ 205 நவம்பர் மாத முதல் வாரத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எந்த நாட்டுக்குப் பயணமானார்?
தாய்லாந்து
இலங்கைக்கும், தாய்லாந்துக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகள் ஏற்படுத்தப்பட்டு 60 ஆண்டுகள் நிறைவடையும் நிலையிலேயே அவர் அங்கு சென்றுள்ளார்.

- இலங்கையில் நாளொன்றுக்கு சராசரி எத்தனை கருக்கலைப்புக்கள் நடைபெறுவதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது?
  650

- உலகின் சுபீட்சமான நாடுகளின் வரிசையில் இலங்கை எத்தனையாவது இடத்தைப் பிடித்துள்ளது?
  61 ஆவது
  லண்டனில் இயங்கிவரும் லெகாடும் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
  இதேவேளை, இங்கு நோர்வே தொடர்ந்தும் முதலிடத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

- இலங்கையில் காட்டு யானைகளால் மக்கள் தாக்குதலுக்கு உள்ளானால் எந்த தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு அறிவிக்கலாம் என வன ஜீவராசிகள் திணைக்களம் அறிவித்துள்ளது? 1992

- இந்த வருடம் (2015) அரசின் மதுவரி வருமானம் எத்தனை ரூபாய் அதிகரித்துள்ளதாக நிதியமைச்சு அறிவித்துள்ளது?
  ஒரு கோடி ருபாய்

- யாழ்.மாவட்டத்தில் 224 பாடசாலைகளில் மேற்கொண்ட பரிசோதனையின்படி எத்தனை ஆசிரியர்களுக்கு நீரிழிவு, குருதி அழுத்தம் உள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது?
  ஆயிரத்து 46 பேருக்கு குருதி அழுத்தம்
  403 பேருக்கு நீரிழிவு

- நீரிழிவு நோய் தொடர்பில் அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?
  ஹோட்டல்கள், உணவுச்சாலைகள், தேநீர், குடிபானச்சாலைகள் மற்றும் அரச விழாக்களில் தேநீர், கோப்பி, பால் தேநீர் போன்றவை வழங்கும் போது சீனி சேர்க்கப்படக்கூடாது.
  சீனி பிறிதொன்றாக வழங்கப்படல் வேண்டும்.

Control your Diabetes. For Life.

- வடமாகாண சபையின் 2015 கார்த்திகை மரநடுகை மாதத்தின் வாசகம் என்ன?
  "ஐந்து மாவட்டங்கள் ஐந்து இலட்சம் மரங்கள்"

- இலங்கை கட்டட ஆராய்ச்சி நிலையத்தினால் மண்சரிவு அபாய வலயங்களாக அறிவிக்கப்பட்டுள்ள இடங்கள் எவை?
  நுவரேலியா, பதுளை, கண்டி, குருநாகல், மாத்தளை, மாத்தறை, கேகாலை, இரத்தினபுரி, களுத்துறை, காலி, அம்பாந்தோட்டை, கம்பஹா, மொனராகல
  இதேவேளை, கொழும்பும் அந்தப் பட்டியலில் சேர்க்கப்படக்கூடும் எனவும் தெரியவருகிறது.

❒ சமீப காலத்தில் யாழ்.மாவட்டத்தில் நடுகை செய்யப்பட்ட பணம் விதைகள் எவ்வளவு
**இரண்டரை இலட்சம் (பனை அபிவிருத்தி சபையின் தகவலிலிருந்து...)**

❒ மோல்டாவில் நடைபெற்ற பொதுநலவாய மாநாட்டில் இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா அங்கு கௌரவிக்கப்பட்டமை எதற்காக?
**இளைஞர்களின் முன்னேற்றத்துக்கான பங்களிப்பை வழங்கியமைக்காக இக்கௌரவம் வழங்கப்பட்டுள்ளது. பொதுநலவாய இளைஞர் அமைப்பினால் அவருக்கு இந்தக் கௌரவம் வழங்கப்பட்டது.**

❒ பிச்சைக்காரர்கள் குறித்து ரயில்வே திணைக்களம் எடுத்துள்ள நடவடிக்கை என்ன?
**நவம்பர் - 1 முதல் பிச்சை எடுப்பதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனை மீறும் பட்சத்தில் கைது செய்யப்படுவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

❒ 2014 ஆம் ஆண்டு நாடளாவிய ரீதியில் அரச புற்றுநோய் சிகிச்சை நிலையங்களில் எத்தனை புற்றுநோயாளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர்?
**26 ஆயிரத்து 341 பேர்**

❒ சர்வதேச அரங்கில் பிரபல்யம் பெற்ற நவீன சமையல் கலையின் தந்தை அண்மையில் இலங்கை வந்தார். அவர் யார்?
**மார்க்கோ பியரே வைற் (Marco Pierre White)**

❒ அண்மையில் இலங்கையில் சர்வதேச மகாத்மா காந்தி நிலையம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவினால் எங்கே திறந்து வைக்கப்பட்டது?
**மாத்தளையில்**

❒ அண்மையில் இலங்கையில் இளைஞர் பாராளுமன்றத் தேர்தல் நடைபெற்றது. அது எத்தனையாவது தேர்தல்?
**3 ஆவது**

❒ இலங்கையின் நீதி நியாயத்துக்குமான தேசிய இயக்கத்தின் தலைவரும், கோட்டே ஸ்ரீநாகவிகாரையின் விஹாராதிபதியும், இலங்கை வரலாற்றில் பேசப்படும் ஒரு தேரர் காலமானார். அவர் யார்?

**மாதுலுவாவே சோபித தேரர் (வயது-78)**
இவர் 1990 ஆம் ஆண்டுகளில் கிராமம் கிராமமாகச் சென்று மனித உரிமைகள் தொடர்பாக தர்ம நிகழ்ச்சிகளை நடத்தினார்.

1994 இல் நாட்டில் ஏற்பட்ட ஜனநாயக அரசியல் மாற்றங்களின் முன்னோடியானார்.

நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிக்கும் யோசனையை மக்கள் மயப்படுத்த அவர் நகரம் தோறும் யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் மனித

உரிமை மீறல் தொடர்பாக சர்வதேச விசாரணை நடத்துவதற்குத் தான் எதிர்ப்பு இல்லை என அவர் துணிச்சலுடன் முன்வந்து கூறினார்.

2015 யூலை 22 ஆம் திகதி நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் ஓர் புரிந்துணர்வு ஒப்பந்தத்திலும் கைச்சாத்திட்டார்.

இரவது மரண நிகழ்வு தினத்தில் தேசிய துக்கதினமாக அறிவிக்கப்பட்டு அரச மரியாதையுடன் இறுதிக் கிரியைகள் (12.11.2015) நடைபெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

❒ "எவன்கார்ட்" மிதக்கும் மிதக்கும் ஆயுதக் கப்பல் தொடர்பான சர்ச்சையைத் தொடர்ந்து தனது பதவியை இராஜினாமாச் செய்த சட்டம் ஒழுங்கு அமைச்சர் யார்?
திலக் மாரப்பன

❒ எலிபன்ட் ஹவுஸ் அறிமுகம் செய்த புதிய பானத்தின் பெயர் என்ன?
**F5 Isotonic Sports**

❒ அண்மையில் மறைந்த ஈழத்தின் சிரேஷ்ட ஊடகவியலாளர் (புகைப்படக் கலைஞர்) யார்?
கலாபூஷணம் ச.கதிரவேலு

## இலங்கையில் இன்று இவர்கள்...

⌖ இலங்கையின் பதில் பொலிஸ்மா அதிபராக நியமனம் பெற்றவர் யார்?
பூஜித ஜயசுந்தர

⌖ அமைச்சர் நியமனம்
சகால ரத்னாயக்க - சட்டமும் ஒழுங்கும் தொடர்பான அமைச்சர் (தெற்கு அபிவிருத்தி அமைச்சர்)
- டி.எம்.சுவாமிநாதன் - சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் (புனர்வாழ்வு, மீள்குடியேற்றம், இந்து மத விவகார அமைச்சர்)

⌖ பதில் பிரதம நீதியரசராக அண்மையில் ஜனாதியால் நியமிக்கப்பட்டவர் யார்?
பிரியசாத் டெப்

⌖ அரச பொறுப்பு முயற்சிகள் குழுவின் (கோப்) தலைவராகத் தெரிவு செய்யப் பட்டவர் யார்?
ஹந்துன்நெத்தி (எம்.பி.)

⌖ இலங்கையின் கடற்படைத் தளபதி யார்?
வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேகுணவர்த்தன

⌖ இலங்கை வலைப்பந்தாட்டச் சங்கத்தின் உப தலைவியாக நியமிக்கப்பட்ட தமிழர் யார்?
**சிதம்பரநாதன் சுரேந்தினி (யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான அலகின் விரிவுரையாளர்)**

⌖ பதில் பிரதம நீதியரசராக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டவர் யார்?
**பிரியசாத் டெப்**

⌖ இலங்கையின் தற்போதைய பதில் பொலிஸ்மா அதிபர் யார்?
**சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பூஜித்த ஜயசுந்தர**

⌖ இலங்கைக்கான வியட்னாம் தூதுவர் யார்?
**பஹன் கியு து**

⌖ தேசிய கரப்பந்து சம்மேளன தெரிவுக்குழுவின் தலைவர் யார்?
**கேர்னல் மஹேஷ் அபேரத்ன**

## உலகை நோக்கிய இம்மாத வலை வீசலில்...

◈ பல தசாப்த காலமாக இருந்து வந்த ஒரு தம்பதிக்கு ஒரு குழந்தை எனும் சட்டத்தை மாற்றி, தற்போது ஒரு தம்பதியினருக்கு இரு குழந்தைகள் என்னும் புதிய சட்டத்தை நடைமுறைக்கு கொண்டு வந்துள்ள நாடு எது?
**சீனா**
ஒரு குழந்தை எனும் சட்டம் 1970 ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

◈ அதிகப்படியான கைதிகளைக் குறைக்கும் வகையில் 6 ஆயிரம் கைதிகளை விடுதலை செய்யவுள்ள நாடு எது?
**அமெரிக்கா**
அமெரிக்க வரலாற்றில் இந்தளவுக்கு பெருமளவான கைதிகள் இதுவரை ஒரே சமயத்தில் விடுவிக்கப்படுவது இதுவே முதல் முறையாகும்.

◈ சர்ச்சைக்கு உள்ளாகியிருக்கும் தென்சீனக் கடல் பகுதியை உரிமை கோரியிருக்கும் நாடு எது?
**தென்கொரியா**

◈ உலகளாவிய ரீதியில் ஒவ்வொரு 10 நிமிடத்துக்கும் ஒரு குழந்தை நாடற்றவராகப் பிறக்கிறது என்றும் இதனை சிரியப் போர் அதிகமாக்கி வருகின்றது என்றும் தெரிவித்துள்ள நிறுவனம்/சபை எது?
**ஐக்கிய நாடுகள் சபை**

- 2015 ஆம் ஆண்டுக்கான உலகின் சக்தி வாய்ந்தவர்களின் பட்டியல் அண்மையில் "போர்ப்ஸ்" நிறுவனம் வெளியிட்டது. அதில் முதலிடத்தைப் பெற்றவர் யார்?
**ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புட்டின்**
**இரண்டாவது ஜேர்மன் பிரதமர் ஏஞ்சலா மெர்க்கெல்**
**மூன்றாவது அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா**
**நான்காவது பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ்**
**ஐந்தாவது சீன ஜனாதிபதி ஜீ ஜின்பிங்**
இதேவேளை, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி 9 ஆவது இடத்தையும் பிடித்துள்ளார்.

- அடுத்த ஐந்து ஆண்டுக்குள் எச்.ஐ.வி. தடுப்பூசி மருந்தைக் கண்டுபிடிக்க மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் உறுதி பூண்டுள்ளனர். அந்த மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள்?
**ஐரோப்பா, ஆஸ்திரேலியா, கனடா, அமெரிக்கா**

- அதிகரித்து வரும் புறாக்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் புறாக்களுக்கு கருத்தடை செய்யத் தீர்மானித்துள்ள நாடு எது?
**சிங்கப்பூர்**

- அண்மையில் உலகில் ஏபோலா இல்லாத இடமாக அறிவிக்கப்பட்டுள்ள பகுதி எது?
**சியரா லியோன்**

- உலகப் புகழ்பெற்ற கிற்றார் கலைஞர் ஒருவரின் கிற்றார் 2.4 மில்லியன் டொலருக்கு ஏலம் எடுக்கப்பட்டது. அந்தக் கலைஞர் யார்?
**ஜோன் லெனின்**

- அண்மையில் சமூக இணையத்தளமான பேஸ்புக்கில் இணைந்த உலகப் பிரபலம் யார்?
**பராக் ஒபாமா**

- ஈரானுக்கு தரைவழி மற்றும் வான்வழி ஏவுகணைகளை வழங்குவதற்கு கைச்சாத்திட்டுள்ள நாடு எது?
**ரஷ்யா**

- கடல்சார் பாதுகாப்புக் குறித்து அண்மையில் இலங்கை வந்து பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட மேற்குப் பிராந்திய நிலையங்களுக்கான கட்டளை அதிகாரி யார்?
**பிரிகேடியர் ஜெனரல் எட்வேர்ட் டி பான்ரா**

◇ உலகில் மிக அண்மையில் உலக நாடுகளை அதிர்ச்சிக்குள்ளாக்கிய பயங்கர வாதத் தாக்குதல் எந்த நாட்டில் நடைபெற்றது?
**பிரான்ஸின் தலைநகர் பாரிஸில், 129 பேருக்கு மேல் பலியாகினர்.**

◇ அரசின் அனுமதியுடன் ஊக்க மருந்தைப் பயன்படுத்திய சர்ச்சையில் சிக்கிய நாடு ஒன்று சர்வதேச தடகளச் சம்மேளனத்திலிருந்து நீக்கப்பட்டது. அந்த நாடு எது? **ரஷ்யா**

◇ அண்மையில் ஒரு நாட்டின் ஜனாதிபதியை பதவி விலகுமாறு கோரி பல்லா யிரக்கணக்கான பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
அது எந்த நாட்டின் ஜனாதிபதி?
**தென்கொரியா**

◇ பாரிஸ் தாக்குதல் குறித்து அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா ஐ.எஸ் தீவிரவாதிகள் குறித்து வெளியிட்ட கருத்து என்ன?
**ஐ.எஸ். அமைப்பின் மீது தரைத்தாக்குதல் இல்லை.**

◇ வெள்ளை மாளிகை கறுப்பாக்கப்படும் என அச்சுறுத்தல் விடுத்துள்ள தீவிரவாத அமைப்பு எது? **ஐ.எஸ். அமைப்பு**

◇ உலகின் இரண்டாவது பெரிய வைரம் அண்மையில் எந்த நாட்டில் வெட்டி எடுக்கப்பட்டது?
**ஆபிரிக்க நாடான போட்ஸ்லானா சுரங்கத்தில்**

◇ அண்மையில் காலமாகிய தென்கொரிய முன்னாள் ஜனாதிபதி யார்?
**கிம்யங் காம் (வயது-87)**

◇ ரோபோ மூலம் வெற்றிகரமாக சத்திரசிகிச்சை மேற்கொண்ட நாடு எது?
**சீனா**

◇ ஐ.நா.வுக்கான அமெரிக்கத் தூதுவர் சமந்தா பவருக்கான விருந்துபசாரத்தினை முன்னிட்டு "இலங்கையின் அப்ப இராஜதந்திரம்" என்று குறிப்பிட்ட இலங் கைக்கான அமெரிக்கத் தூதுவர் யார்?
**அதுல் கெசாப்**

◇ அண்மையில் ஐ.நா.வில் 24 மணி நேரத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் என்ன?
**ஐ.எஸ். தீவிரவாதத்தை அடியோடு ஒழிப்பது.**

◇ 2015 ஆம் ஆண்டுக்கான பொதுநலவாய நாடுகளின் தலைவர்களுக்கான மாநாடு எந்த நாட்டில் நடைபெற்றது? **மோல்டா (Malta)**

◇ மலேரியா நோய் மக்களிடையே பரவாமல் தடுப்பதற்காக அமெரிக்க கலிபோர்னியா பல்கலைக்கழக மரபணு தொழில்நுட்பம் சார்ந்த விஞ்ஞானிகளால் புதிய மரபணு நுளம்பு உருவாக்கப்பட்டுள்ளது.
அந்த நுளம்பின் பெயர் என்ன?
"கிரிஸ்ப"

◇ சுதந்திரதினக் கொண்டாட்டத்துக்குப் பதிலாக நாட்டினைச் சுத்தப்படுத்தும் நடவடிக்கையொன்றை முன்னெடுக்குமாறு அறிவித்துள்ள நாடு எது?
**தன்சானியா**

◇ அண்மையில் இரண்டு நாடுகள் இணைந்து கூட்டு விமானப் பயிற்சியில் ஈடுபட்டன. அந்த நாடுகள் எவை?
**சீனா - பாகிஸ்தான்**

◇ தனது நாட்டில் பெண்கள் 'பர்தா' அணிவதற்கு தற்போது தடை செய்துள்ள நாடு எது?
**சுவிட்சர்லாந்து**

◇ "என்னைப் போல் மயிர் வெட்டுங்கள்" என அண்மையில் கூறிய வடகொரியாவின் ஜனாதிபதி யார்?
**கிம் யோங் அன்**

◇ 2014 நவம்பர் மாதம் 224 பயணிகளுடன் மாயமான விமானம் பின்சினாய்ப் பகுதியில் விழுந்து நொருங்கி அனைவரும் பலியாகினர்.
இந்த விமானம் எந்த நாட்டு விமானம்?
**ரஷ்யா**
அந்த விமானத்தின் பெயர் என்ன?
**ஏர்பஸ் ஏ-321**

◇ ரஷ்யா வல்லரசு நாடு இல்லையென அண்மையில் கருத்துக் கூறியுள்ள நாடு எது?
**அமெரிக்கா**

◇ உலகின் முதலாவது ரோபோ நடிகை எந்தத் திரைப்படத்தில் நடிக்க வைக்கப் பட்டது?
**சயோனரா**
இத்திரைப்படம் கடந்த நவம்பர் 21 வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

◇ பூமியை ஒத்த புதிய கோள் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டது. அந்தக் கோளின் பெயர் என்ன?
**ஜி.ஜெ.1132 பி (G.J.1132 B)**

◈ வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மியான்மார் பாராளுமன்றத் தேர்தலில் வெற்றியீட்டிய எதிர்க்கட்சித் தலைவர் யார்? அவருடைய கட்சி எது?
**ஆங்சாங் சூகி, தேசிய ஜனநாயக லீக் கட்சி**

◈ இந்தியாவின் அம்பேத்கார் அவர்களின் நினைவு இல்லம் எந்த நாட்டில் பிரதமர் நரேந்திர மோடியால் திறந்து வைக்கப்பட்டது?
**இங்கிலாந்தில்**

◈ அண்மையில் கலாமாகிய தென்கொரியாவின் முன்னாள் ஜனாதிபதி யார்?
**கிம் யங் சாம் (வயது-78)**

◈ விளையாட்டு வீரர்களை அமைதிப்படுத்தும் புதிய உடையை அறிமுகப்படுத்தியுள்ள நிறுவனம் எது?
**வொலெபெக்**

◈ தீவிரவாதிகளைவிடவும் 'நுளம்புகள்' தொடர்பிலேயே கவலை அடைந்துள்ளதாக அண்மையில் கூறிய உலகப் பிரசித்தி பெற்ற மதத் தலைவர் யார்?
**பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ்** (அண்மையில் கென்யாவுக்கு விஜயம் செய்த போதே மேற்படி கருத்தை வெளியிட்டார்)

◈ கடந்த ஐந்து மாதங்களுக்குள் இரண்டாவது முறையாகவும் பாராளுமன்றத் தேர்தல் எந்த நாட்டில் இடம்பெற்றது?
**துருக்கியில்**
கட்சிகள் பெரும்பான்மை வாக்குகளைப் பெறத் தவறியமையாகும்.

◈ சர்வதேச அளவில் ஆரோக்கியமான மக்கள் கொண்ட நாடுகளின் பட்டியலில் முதலிடத்தில் உள்ள நாடு எது?
**சிங்கப்பூர்**
**இரண்டாவது - இத்தாலி**
**மூன்றாவது - அவுஸ்ரேலியா**
இதேவேளை, இந்தியா 103 ஆவது இடத்திலும் உள்ளது. (ஐ.நா.வின் அறிக்கையிலிருந்து...)

◈ அண்மையில் தாய்லாந்துக்குச் சென்ற ஜனாதிபதி மைதிரிபால சிறிசேன அந்நாட்டின் முடிக்குரிய இளவரசியை எந்த மாளிகையில் சந்தித்துக் கலந்துரையாடினார்?
சேராபெதும்

◈ சூரியக் குடும்பத்தின் தொலைதூர விண்பொருள் ஒன்று வானியலாளரால் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டது. அந்த விண்கல்லின் பெயர் என்ன?
**வீ 774104**

◇ வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மியான்மார் பாராளுமன்றத் தேர்தலில் வெற்றியீட்டிய எதிர்க்கட்சித் தலைவர் யார்?
**ஆங்சாங் சூகி**

◇ உலகின் இரண்டாவது பெரிய வைரக் கல் எந்த நாட்டில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது?
**பொட்ஸ்வானா**

## உலகின் இன்றைய நிலையில் இவர்கள்...

◎ பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகள் சம்மேளனத்தின் தலைவர் யார்?
**லூயிஸ் மார்ட்டின்**

◎ இந்திய பாதுகாப்பு அமைச்சர் யார்?
**மனோகர் பரிக்கர்**

◎ பிரான்ஸ் நாட்டின் ஜனாதிபதி யார்?
**பிராங்கொங் ஹொலண்ட்**

◎ ஓமான் நாட்டின் மன்னர் யார்?
**கபூஸ் (வயது-74)**

◎ ஐ.நா.வுக்கான அமெரிக்காவின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி யார்?
**சமந்தா பவர்**

◎ தாய்லாந்து நாட்டின் உப பிரதமர் யார்?
**விசானு கிறிஆநகம்**

◎ பொதுநலவாய நாடுகளின் தற்போதைய தலைவர் யார்?
அவர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
**எட்வேட் அடாமி, நாடு : மோல்ரா (Malta)**



இதேவேளை இப்பதவியை 2015 நவம்பர் மாதம் 26 ஆம் திகதி வரை இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா வகித்து வந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

◎ ஆர்ஜென்ரீனாவின் புதிய ஜனாதிபதியின் பெயர் என்ன?
**மாரிசியோ மாக்ரி (கன்சர்வேடிவ் கட்சி)**

◎ தன்சானியாவின் புதிய ஜனாதிபதி யார்? **ஜோன் மகுபுலி**

◎ தாய்லாந்தின் பிரதமர் யார்? **ஜெனரல் சேன் ஓ சா**

◎ இலங்கைக்கான சீரெல்ஸ் நாட்டின் தூதுவர் யார்?
பினிப்பே லீ கோல்

◎ தாய்லாந்தின் முடிக்குரிய இளவரசி யார்? சக்ரி சிரின்டோான்

◎ கனடாவின் புதிய பிரதமர் யார்? ஜஸ்டின் திருடியு

## அயல் நாட்டுப் பக்கம் நோக்கிய வலை வீசலில்...

※ அண்மையில் காலமாகிய பிரபல பக்திப் பாடகர் யார்?
பித்திக்குளி முருகதாஸ் (வயது-95)

## விளையாட்டுப் பக்கம் நோக்கிய வலை வீசலில்...

⊙ போர்த்துக்கல் நாட்டின் உதைபந்தாட்ட வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ எத்தனை தடவை தங்கக் காலணி வென்றெடுத்தார்?
நான்கு தடவை

⊙ உதைபந்தாட்ட வீரர் கிறிஸ்டியானோ பெயரில் எந்த நாட்டில் நூதன காட்சிச்சாலை உள்ளது?
போர்த்துக்கல்

⊙ அண்மையில் விமானம் ஒன்றினைச் சொந்தமாக வாங்கிய உலக பிரபல உதைபந்தாட்ட வீரர் யார்?
கிறிஸ்டியானோ ரொனால்டோ

⊙ ஆர்ஜென்டினா உதைபந்தாட்ட அணியின் தலைவரும். பஸ்ஸிலோனா நட்சத்திர அணியின் தலைவர் யார்?
மெர்ஸி

⊙ ஸ்பெயினில் அண்மையில் நடைபெற்ற செஸ் தொடரில் நடப்புச் சம்பியன் என்ற அந்தஸ்சையும் இழந்து ஆனந் 3 ஆம் இடத்தைப் பிடித்துள்ளார். இவருக்கு எதிராக விளையாடிய செஸ் வீரர் யார்?
லிரென் டிங் (சீனா)

⊙ வடமாகாண மேசைப்பந்தாட்ட தரப்படுத்தலில் முதலிடத்தைப் பிடித்துக் கொண்ட மாணவன் யார்?
பிரசாத் (கொக்குவில் இந்துக் கல்லூரி)
இதேவேளை, மேற்படி தரப்படுத்தலில் பெண்கள் பிரிவில் ஜெனனி (யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை) முதலிடத்தைப் பிடித்துள்ளார்.

- சர்தேச கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ள வீரர் யார்? **ஜோன்சன் (ஆஸ்திரேலியா)**

- 2015 நவம்பர் மாத இறுதியில் நடைபெற்ற மாற்றுத் திறனாளிகளுக்கான ரி-20 உலகக் கிண்ணப் போட்டியில் இடம்பிடித்துள்ள தமிழ் வீரர் யார்?
**நிதர்சனன் (வவுனியா)**

- அண்மையில் உள்ளூர் ஆட்டத்தின்போது மயங்கி விழுந்து சாவடைந்த நமீபியா கிரிக்கெட் வீரர் யார்?
**ரேமண்ட் வேன் ஸ்கூல்**

- பிறேசில் - ரியோடி ஜெனிரோவில் எதிர்வரும் 2016 ஆம் ஆண்டு நடைபெற வுள்ள ஒலிம்பிக் போட்டிகளுக்கு உத்தியோகபூர்வ மொழியாக எந்த மொழி அறிவிக்கப்பட்டுள்ளது? **பிரெஞ்சு மொழி**

- 2015 ஆம் ஆண்டுக்கான ரக்பி உலகக் கிண்ணத்தை மூன்றாவது தடவையா கவும் கைப்பற்றிய அணி எது?
**நியூஸிலாந்து அணி**
இதேவேளை, ரக்பி உலகக் கிண்ணத்தை 3 முறை வென்ற ஒரேயொரு அணி என்னும் பெருமையையும் நியூஸிலாந்து அணி பெற்றுள்ளது.

- 5 அணிகள் பங்கேற்கும் இருபது 20 ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி 2016 இல் எங்கே நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது?
**பங்களாதேஷில்**
50 ஆண்டுகள் ஆடப்படும் ஆசிய கிண்ணக் கிரிக்கெட் போட்டி 1984ஆம் ஆண்டு முதல் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்பட்டு வருகிறது.

- சர்வதேச கால்பந்து தரவரிசையில் முதலிடத்தைப் பெற்று வரலாற்றுச் சாதனை படைத்த அணி எது?
**பெல்ஜியம் அணி**

- நியூஸிலாந்தின் ரக்பி அணியின் தலைவர் அண்மையில் ஓய்வுபெற்றார். அவர் யார்?
ரிச்சி மெக்கோவ்

- கிரிக்கெட் வரலாற்றில் முதன் முறையாக சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலால் நான்கு பெண் நடுவர்கள் நியமனம் பெற்றனர். அவர்கள் யார்?
  - கேத்தி கிராஸ் - நியூஸிலாந்து
  - க்ளேர் பொலோசக் - அவுஸ்ரேலியா
  - கயூ ரெட்ஃபெர்ன் - இங்கிலாந்து
  - ஜாக்குலின் வில்லியம்ஸ் - ஜமைக்கா

## விருதுகள் பக்கம் வீசிய வலையில்...

❖ 2015 கோவாவில் நடைபெற்ற சர்வதேச திரைப்பட விழாவில் இசைஞானி இளையராஜாவுக்கு வழங்கப்பட்ட விருது எது?
**சிறந்த ஆளுமைக்கான நூற்றாண்டு விருது**

❖ இலங்கை மலிபன் பிஸ்கட் கம்பனி (Maliban Biscuit Manufactories Lim ited) அண்மையில் எத்தனையாவது தடவை இலங்கை தேசிய தர விருதினைப் பெற்றது?
**3 ஆவது**

❖ 2015 ஆம் ஆண்டின் ஆசியாவின் உறுதியான ஒரேயொரு வங்கிகளின் சிறப்புத் தர வரிசையில் தெரிவு செய்யப்பட்ட வங்கி எது?
**இலங்கை வங்கி**

## அழகுராணிகள் பார்வைப் பக்கம்

➢ ஜப்பானிய டோக்கியோ நகரில் இடம்பெற்ற சர்வதேச உலக அழகுராணிப் போட்டியில் வெற்றியீட்டிய அழகுராணி யார்?
**எடிமன் மாரினெஸ் (வெனிசுலா)**

➢ சுவிஸ் நாட்டின் அழகுராணியாக முடி சூட்டிக் கொண்டவர் யார்?
**லோரின் சாலின்**

➢ நாஸிப் படுகொலைகளின் போது உயிர் தப்பியவர்களுக்கான அழகுராணிப் போட்டி அண்மையில் இஸ்ரேலில் நடைபெற்றது. அந்தப் போட்டியில் வெற்றியீட்டிய அழகுராணி யார்?
ரீட்டா பெர்கொவிட்ஸ் (வயது-83)

## நான் கேட்டவை, அறிந்தவை, படித்தவை உங்களுக்காக...

⌖ இலங்கை-சீன முதலாவது பாதுகாப்புக் கலந்துரையாடல் கடந்த வருடம் (2014) எந்த நாட்டில் நடைபெற்றது?
**பீஜிங்கில்**

⌖ தென்கொரியாவின் தலைநகர் எது? சியோல்

⌖ பேஸ்புக் சமூக வலைத்தளத்துக்குப் போட்டியாக மாறிவரும் வலைத்தளம் எது?
**Snapchat**

- பிரான்ஸின் தலைநகர் எது? பாரிஸ்

- C.I.A.யின் விரிவாக்கம் என்ன?
  **Central Intelligence Agency**

- பலரைச் சில காலமும், சிலரைப் பல காலமும் ஏமாற்றலாம். ஆனால் எல்லோரையும் எப்போதும் ஏமாற்ற முடியாது. இக்கூற்றின் சொந்தக்காரர் யார்?
  **ஆபிரகாம் லிங்கன்**

- பெரிய பிரித்தானியாவும், அயர்லாந்தும் இணைந்து ஐக்கிய இராஜ்சியத்தில், எத்தனை ஆண்டுகள் ஆட்சி புரிந்துள்ளனர்?
  *63 ஆண்டுகள் 7 மாதங்கள்*


- அதிகாரபூர்வமாக எத்தனையாம் ஆண்டு மகளிர் கிரிக்கெட் போட்டி ஆரம்பமானது? *1934*

---

## நுண்ணறிவு - IQ


தரப்பட்ட உருக்களில் ஏதோவொரு உரு மற்றைய உருக்களில் இருந்து வேறுபடுகின்றது. அந்த உருவைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக?

01.




1 2 3 4 5

02.





1 2 3 4 5

03.




1 2 3 4 5

04.




1 2 3 4 5

05.



1 2 3 4 5

06.



1 2 3 4 5

சங்கவி, நந்தினி, விசாலினி, திவ்வியா, சந்தியா, கமலினி ஆகிய பெயர்களைக் குறிக்கும் ஆங்கிலத்தில் உருவாக்கப்பட்ட இரகசியக் குறியீட்டு முறை கீழே தரப்பட்டுள்ளது. பொருத்தமான பெயர்களைத் தெரிவுசெய்க?

07 **ACED** ...........................................

08. **BCEH** ...........................................

09. **EFJD** ...........................................


10. **GIKH** ...........................................

11. **JMKH** ...........................................

12. **AOGJ** ...........................................

கீறிட்ட இடங்களில் பொருத்தமான எண்ணை எழுதுக.

13




14.

| | | |
|---|---|---|
| 7 | 6 | 21 |
| 9 | 8 | 36 |
| 5 | 6 | ..... |

15. 54 46 42 40 .......

16. 1 8 27 64 .......


17. 80 20 10 10 .......

18. 5 32 10 16 16 8 ........ ........


19.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 22 | 14 | 21 | 15 | ..... | ..... |
| 11 | 15 | 12 | 14 | ..... | ..... |

20




தரப்பட்ட வென் உருவைப் பயன்படுத்தி கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.




வர்த்தகக் கண்காட்சி ஒன்றுக்கு வருகை தந்தோர் பேசும் மொழிகள் மேல் காட்டப்பட்ட வென் உருவில் தரப்பட்டுள்ளது.

வருகை தந்த சிலருக்கு ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளைப் பேசக் கூடியதாக இருந்ததைக் காணக்கூடியதாக இருந்ததுடன்,

வருகை தந்தவர்களில் ஒவ்வொருவரும் குறைந்தது ஏதேனும் ஒரு மொழியை யாவது பேசக்கூடியவர்களாக இருந்தனர்.

**மேலே வென் உருவில் தரப்பட்ட தரவுகளுக்கு அமைய பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

21. நான்கு மொழிகளையும் பேசக் கூடியவர்கள் எத்தனை பேர்?
    1) 36 2) 26 3) 40 4) 27

///////////////////////////////////////////////////////////////////////////

22. ஏதாவது மூன்று மொழிகளை மாத்திரம் பேசத் தெரிந்தவர்கள் எத்தனை பேர்?

1) 126 2) 124 3) 132 4) 128

23. தமிழ் - ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளையும் பேசத் தெரிந்தவர்கள் எத்தனை பேர்?

1) 112 2) 138 3) 164 4) 72

24. ஏதாவது ஒரு மொழியை மாத்திரம் எத்தனை பேர் பேசுகின்றனர்?


1) 70 2) 106 3) 124 4) 138

25. தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் குறைந்தது ஒரு மொழியையாவது பேசுவோரின் எண்ணிக்கை யாது?

1) 344 2) 350 3) 366 4) 382


26. இந்த வர்த்தகக் கண்காட்சிக்கு வருகைதந்தோரின் எண்ணிக்கை யாது?

1) 402 2) 384 3) 420 4) 362

27. 


1) 21 2) 23 3) 22 4) 24

ஒவ்வொரு முகப்பிற்கும் A தொடக்கம் F வரை குறிக்கப்பட்ட சதுர முகி ஒன்றின் மூன்று வேறுபட்ட நிலைகள் கீழே காட்டப்பட்டுள்ளது. இந்த நிலைகளைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடை தருக?




28. C யின் எதிர்ப் பக்கம் அமைந்துள்ள ஆங்கில எழுத்து யாது?

1) B 2) F 3) A 4) D

29. D யின் எதிர்ப்பக்கம் அமைந்துள்ள ஆங்கில எழுத்து யாது?

1) A 2) C 3) B 4) D

30. E யின் எதிர்ப் பக்கம் அமைந்துள்ள ஆங்கில எழுத்து யாது?

1) A 2) C 3) B 4) D

## விடைகள்

01) 4 - கறுப்பு வட்டம் 4இல் 4 உள்ளது.
02) 2 - ♦ நேரே ❖ வரவேண்டும்.
03) 5 - நிறந்தீட்டப்பட்ட முக்கோணிக்கு நேரே வெள்ளைப் பூ வரவேண்டும்.
04) 5 - நேர், மறை குறியீடு நிலைக்குத்தாகவுள்ளது.
05) 3 - வலது பக்க மூலையில் உள்ள குறியீடு வித்தியாசமாகவுள்ளது.
06) 4 - சதுரத்தின் நிறம் தீட்டல்
07) சந்தியா
08) நந்தினி
09) திவ்வியா
10) கமலினி
11) விசாலினி
12) சங்கவி
13) 5 - கீழுள்ள எண்களின் கூட்டுத்தொகை மேல் எண்ணின் வர்க்கத்திற்கு சமன்
14) 15 - முதல் இரண்டு எண்களின் பெருக்கத்தின் அரைவாசி
15) 39 - 8, 4, 2, 1 குறைய வேண்டும்.
16) 125 - $1^3$, $2^3$, $3^3$, $4^3$, $5^3$
17) 20 - 4, 2, 1, 0.5 ஆல் பிரித்தல் வேண்டும்.
18) 23, 4 - 5,6,7 என்று கூடுகிறது : அடுத்தது 16,8,4 என்று குறைகிறது.
19) 20/13, 16/13 ஒன்றுவிட்ட ஒன்று மாறி மாறிக் கூடிக் குறையும்.
20) 8 - இலக்கங்களின் பெருக்கத்தை, கூட்டுத்தொகையால் வகுத்தல்
21) 40

| | | |
|---|---|---|
| 22) 124 | 25) 366 | 28) F |
| 23) 112 | 26) 384 | 29) A |
| 24) 106 | 27) 22 | 30) B |


**சந்தா விபரம் - Delivered to Your Home**


Valai வலை சமகால பொது அறிவுத் தொகுப்பு

உங்கள் சந்தா தொகையை சி.என்.எச்.சாள்ஸ் என்ற பெயரில் யாழ். பிரதம தபாலகத்தில் மாற்றக் கூடியதாக காசுக் கட்டளை (Money Order) அனுப்பப் படுதல் வேண்டும். அல்லது உங்கள் பகுதியில் உள்ள கொமர்ஷல் வங்கியில் C.N.H. Charles, Commercial Bank (Stanley Road, Jaffna) 8127011186 என்ற சேமிப்புக் கணக்கில் வைப்புச் செய்து வங்கி ரசீதுடன் உங்கள் முழுப் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் என்பன அடங்கிய விண்ணப்பத்தினை எனது முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். அத்துடன் எத்தனையாவது இழையிலிருந்து அனுப்ப வேண்டும் என்பதையும் குறிப்பிடுங்கள். இதழின் பிரதிகள் கண்ணியமாக உங்களுக்குத் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.



**60/- விலைக் கழிவுடன் வருடச் சந்தா 300/- மட்டுமே.**

## ❒ அவன்கார்ட் – Avant Garde :





'அவன்கார்ட்' என்பது ராஜபக்ஷ அரசாங்கத்தின் மிதக்கும் ஆயுதக் களஞ்சியக் கப்பல் ஆகும். அது கடற்கொள்ளைக்கு எதிராகச் செயற்படும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்டதாகும். இது இலங்கை பாதுகாப்பு வீரர்களைக் கொண்ட சர்வதேச அங்கீகாரம் பெற்ற கப்பல் சேவை ஆகும்.

இது அவன்கார்ட் மெரிடியம் சேர்விஸ் (பிரைவேட்) லிமிட்டெட் என்ற இலங்கை பாதுகாப்பு அமைச்சின் கீழான கம்பனி ஆகும்.

இது சர்வதேச சட்டங்களுக்கும், சமவாயங்களுக்கும் உட்பட்ட கடற்கைத் தொழில் பாதுகாப்பு அமைப்பின் பிரமாணங்களுக்குட்பட்டு அமைக்கப்பட்ட தாகும். எனவே இவ் அவன்கார்ட் விடயத்தில் சட்டம் மீறப்பட்டுள்ளதா? ஊழல் மோசடி புரியப்பட்டுள்ளதா என்பது பற்றி தற்போதைய நல்லாட்சி அரசாங்கத்தில் ஆராயப்பட்டு வருகிறது.

---



## அதிபரின் பார்வையில்...

அனேக இதழ்கள் மழைக்கு முளைத்த காளான்கள் போல் தோன்றி மறைந்து Nghfpd wd . Mdhy;,ioawhJ IkgjhtJ 'வலை' வெளிவந்து பொன்விழா காணுவதையிட்டு வாழ்த்துகின்றேன்.

நவீன இலத்திரனியல் சாதனங்களின் பயன்பாட்டால் இன்றைய சமூகத்தினரிடையே வாசிப்பு பழக்கம் குறைந்து வருகின்ற இக்கால கட்டத்தில் அவர்களின் பொது அறிவானது எந்த மட்டத்தில் இருக்கும் என்பதை நான் சொல்லித் தெரியவேண்டியதில்லை.

Ntiythagg;gwfhd Nghlbgg;gUPi rfsg;Y k>fnghj.(c/த) பரீட்சையிலும் பொது அறிவினைப் பரீட்சிப்பதற்கென்றே பரீட்சைகள் நடத்தப்படுகின்ற வேளையில், பரீட்சார்த்திகளுக்கு விட்டமின் மாத்திரைகளாக – நூலகர் சி.என்.எச். சாள்ஸ் அவர்கள் வெளியிடுகின்ற 'வலை' சஞ்சிகை மாதாந்தம் எம் கைகளில் தவழ்வதனையிட்டு பெரிதும் மகிழ்வடைகின்றேன்.

எமது கல்லூரி மாணவர்கள் தாம் கலந்து கொள்ளுகின்ற பொது அறிவு தொடர்பான போட்டி களுக்குச் செல்லும் முன்னர் வலை சஞ்சிகையின் தொகுப்பினைக் கற்றறிந்து சென்றதன் பயனாக பல வெற்றிகளையும் சந்தித்துள்ளார்கள்.

விசேடமாக அவரது சஞ்சிகை நடைமுறை சார்ந்த பொது அறிவினைச் சுமந்து வரும் வலையானது அது பின்னப்படும் இறுதி நிமிடம் வரையிலான தகவல்களைத் தாங்கி வருவது அதன் சிறப்பம்சமாகும். இது எல்லாத் தரப்பினரும் வாசிக்க வேண்டிய ஒரு அரிய பொக்கிஷமாகும்.

அவரது முயற்சி மென்மேலும் தொடர வாழ்த்துகின்றேன்.

திரு.பி.ஸ்ரான்லி றஞ்சிதன், M.Ed.
உதவி அதிபர் (தமிழ் பிரிவு),
புனித அந்தோனியார் கல்லூரி (தே.பா),
வத்தளை.



தொடர்புக்கு : சி.என்.எச்.சாள்ஸ், 163 செம்மணி வீதி, நல்லூர். தொ.இல : 0776913337
heyncharles@gmail.com